DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | -- |
| Preliminary Register | : **CC 301/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : அழகர்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 11.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 11th June 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மைப்பாறையில் குடியிருந்து வருகிறேன். எதிரி ஆனந்தகுமாரை எனக்கு தெரியாது. அ.சா.1 சுகன்யாவை எனக்கு தெரியும். அவர் எனது துாரத்து முறை அண்ணனின் மகள். அ.சா.2 எனக்கு தெரியும். அவர் மேற்கூறிய அண்ணனின் மனைவி. அ.சா.3 யை எனக்கு தெரியும். அவர் எனது ஊரை சேர்ந்தவர். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

31.03.2014 ம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் எதிரி ஆனந்தகுமார் சுகன்யாவின் வீட்டு கதவை தட்டிக்கெண்டிருந்தார் என்றும், அப்போது நானும், எங்கள் ஊரை சேர்ந்த போத்திராஜும் தெருவில் நின்று

பேசிக்கொண்டிருந்தோம் என்றும், ஆனந்தகுமார் சுகன்யாவை பார்த்து அசிங்கமாக பேசி அவரது கையை பிடித்து இழுத்தார்என்றும், கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**